**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தென்காசி**

**முன்னிலை: திரு.கே.பாஸ்கர், பி.ஏ., பி.எல்.,**

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, தென்காசி**

2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 04 ஆம் நாள் புதன்கிழமை

**<u>அசல் வழக்கு எண். 400/2021</u>**

1. K. மைதீன்
2. முஜி பாத்திமா ... வாதிகள்

/எதிர்/

1. பீமா பேகம்
2. P. செய்யது மசூதுமுத்து ... பிரதிவாதிகள்

இவ்வழக்கானது, இந்நீதிமன்றத்தின் முன்னர் இன்று (04.10.2023) விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.T.தூதர்சிங் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.முகமது அபுபக்கர் சித்திக் அவர்கள் முன்னிலையாகியும், வாதிகள் தரப்பில் கட்டாய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில், வாதிகளை அழைத்தும் ஆஜராகாததாலும், வாதிகளின் வருகை தவறுகைக்காகவும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

**<u>தீர்ப்புரை</u>**

வாதிகள் வீட்டு கீழ்பக்க AB சுவரானது வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் பாத்தியப்பட்ட பொதுச்சுவர் என்ற விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் அனுசரணையாக வாதிகள், மேற்படி பொதுச்சுவரின் வழியாக அமைதியாக அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ, அவரது வகையாட்களோ, முகவர்களோ எவ்வித இடைஞ்சலும் செய்யக்கூடாது என்ற நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக் கோரியும், பிரதிவாதிகள் AB பொதுசுவரில் ஏற்படுத்தியுள்ள ஜன்னல்களை அகற்றும்படி ஒரு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம்

பிறப்பிக்கக்கோரியும், இவ்வழக்கின் செலவுத்தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும், வாதிகள் இந்த வழக்கை உரிமையியல் விசாரணைமுறைச்சட்டம், கட்டளை 7 விதி 1 மற்றும் பிரிவு 151-ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள்.

No representation on the plaintiffs side. This case posted under caption for trial (list). However the plaintiffs are not ready for trial. Both the plaintiffs called absent. Hence this suit is dismissed for default with costs.

2023-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 04 ம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்./-திரு.கே.பாஸ்கர்

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**

**தென்காசி.**